விலை ரூபா: 14.00 பக்கங்கள் 8+16 Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

மங்கையர் மனம் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளுக்கு

சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 மாசி 22 புதன்கிழமை (06.03.2002) தொலைபேசி 3378 ஒலி 77

## எதிர்வரும் 25ந் திகதிக்கு முன்னர்
# யாழ்-கண்டி வீதியை திறக்க பிரதமர் பணிப்பு

### எழுதுமட்டுவாளில் சோதனைச் சாவடி

(வலம்புரிச் சிறப்புச் செய்தியாளர்)

**கிளிநொச்சி - யாழ்ப்பாணம் வரையிலான ஏ.9 கண்டிவீதியை இம் மாதம் 25 திகதிக்குள் பயணிகள் போக்குவரத்திற்காக திறப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு நேற்று அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான கண்டி வீதியை திறப்பதற்கு தற்போது எழுதுமட்டுவாள் பகுதியில் உள்ள இராணுவ முகாமை கண்டி வீதியைச் சுற்றி விஸ்தரித்து சோதனைச் சாவடியை அமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவிற்கு உத்தரவிட்டுள்ளார். ஓயாத அலைகள் மூலம் புலிகளினால் கைப்பற்றப்பட்ட பாரிய இராணுவத்தளமான ஆனையிறவிற்குப் பதிலாக எழுதுமட்டுவாளில் உள்ள இராணுவத்தளத்தை சகல வசதிகளும் அடங்கிய தளமாகவும் சோதனைச்சாவடியாகவும் மாற்ற இரணுவம்

(8ம் பக்கம் பார்க்க)

### பொங்குதமிழ் போல் சிங்கள எழுச்சி
#### பேரினவாதிகள் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழர் தாயகத்தில் இடம் பெற்றுவரும் "பொங்கு தமிழ் எழுச்சி" நிகழ்வுகளைப் போல் தென்பகுதியில் உள்ள சிங்கள பேரினவாதக் குழுக்கள் "சிங்கள எழுச்சி" நிகழ்வுகளை நடத்த திட்டமிட்டு வருகின்றனர். கொழும்பு, நுவரேலியா போன்ற இடங்களில் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறுமானால் அதே தினத்தில் கொழும்பிலும், நுவரேலியாவிலும் சிங்கள எழுச்சி நிகழ்வுகள் நடத்தப்படும் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

#### சமாதான முயற்சி
### டிரோன் - ஜஸ்வந்சிங் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுத்துவது குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் இந்திய வெளிவிகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கும் கலந்துரையாடியுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் இலங்கை இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் அங்கு இடம் பெற்ற சந்திப்பிலேயே இவ்வாறு கலந்து ரையாடியுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச் சினை விவகாரத்தில் தற்போது எட்டப்பட்டிருக்கும் முடிவுகள் குறித்து அமைச்சர் டிரோன், ஜஸ்வந்சிங்கிற்கு விரிவாக எடுத்து

(8ம் பக்கம் பார்க்க)

### புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டில் பாதிப்பு எதனையும் ஏற்படுத்தாது
#### முப்படைத் தளபதிகளின் கருத்தென அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டில் பாரதூரமான பாதிப்பு எதனையும் ஏற்படுத்தமாட்டாது என முப்படைகளின் தளபதிகள் கருத்து வெளியிட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் புரிந்துணர்வு உடன்படிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சருடனும் முப்படைத்தள பதிகளுடனும் பேச்சுக்கள் நடத் திய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இவ் உடன்படிக்கைக்கு எதிராக ஜனாதிபதி கூறியிருக்கும் கருத்துக்கள் ஆதாரமற்றவை 1995ம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தி னால் கொண்டு வரப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டில் பல குறைபாடுகள் உள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

### தமிழீழ மக்களின் உரிமைக்காக புலிகளுடன் இணைந்து போராடுவேன்
#### பாராளுமன்றில் சிவாஜிலிங்கம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் இரு அரசாங்கங்கள் இருப்பதை அனைவரும் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாய தேவை உள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது நாட்டில் சமாதானம் ஏற்படுத்துவதற்கும் அதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கும் இருசாராருக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படுவதற்கான சிறந்ததொரு அடித்தளமாகும்.

இவ் ஒப்பந்தத்தை குழப்பும்

(8ம் பக்கம் பார்க்க)

### வவுனியா பாஸ் முறை நேற்று முதல் ரத்து

(வவுனியா)

கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக வவுனியாவில் நடைமுறையில் இருந்து வந்த வதிவிட அனுமதிப்பத்திர நடைமுறை நேற்றிலிருந்து ரத்துச் செய்யப்பட்டுள்ளதென பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வதிவிட அனுமதிப் பத்திர நடைமுறை ரத்துச் செய்யப்பட்டமை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வருபவர்களுக்கும் தென் இலங்கையில் இருந்து வவுனியா வருபவர்களுக்கும் இந்த அனுமதிப் பத்திரம் தேவையில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது (வ)

### நோர்வேத் தூதுவரை வெளியேற்ற ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நோர்வே தூதுவரையும் கண்காணிப்புக் குழு தவைரையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரி நேற்று ஆர்பாட்ட பேரணி ஒன்று கொழும்பில் நடைபெற்றது.

இந்த ஆர்பாட்ட பேரணி கொழும்பு விகாரமாகாதேவி பூங்காவிற்கு முன்னாபக ஆரம்பித்து வாட்பிளேஸ் வழியாக நோர்வே தூதரகத்திற்கு அங்கு ஆர்பாட்டம் நடத்தியதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டது.

பலஸ்தீனம் பிளவுபட்டது போல் இலங்கையையும் பிரிக்க நோர்வே அரசு முயற்சி செய்கின்றது எனவே நோர்வே தூதுவர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறவேண்டும் அம் மகஜரில் கோரப்பட்டுள்ளது.இந் மகஜரில் 200க்கும் அதிகமான புத்தபிக்கள் ஒப்பமிட்டு இருந்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தினை பௌத்த பிக்குகள் முன்னணி ஏற்பாடு செய்திருந்தது. (வ)

**அன்பு வாசகர்களே!**

சங்கு நாதத்துடன் இன்றைய வலம்புரி நாளிதழும் இணைக்கப்பட்டுள்ளது தவறாது கேட்டு வாங்குங்கள் இரண்டினதும் விலை ரூபா 14 மட்டுமே. (ஆ-ர்)

### விமானப் பயண ஒழுங்குமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு பயணிகள் விமான சேவை இன்று இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று பயணம் செய்ய முடியாது தடைப்பட்ட பயணிகளை பயண ஆயத்தங்களுடன் இன்று காலை

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு விளம்பரம்

**உங்கள் இராசிபலன்கள்**

சித்திரபானு வருஷப் (2002-2003) பலன் உங்களுக்கு எப்படி? ரணிலுக்கு இருதலைக் கொள்ளி எறும்பு: சந்திரிகாவிற்கு கானல் நீர்; தமிழ் மக்களுக்கு அங்கலாய்ப்பு எங்கும் விற்பனையாகின்றன V.A சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள். (4786)

**அறிமுகம்**

ஐந்து மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை உங்கள் வாடிக்கை விற்பனையாளரிடம் கொடுத்து ஒரு சோப் இனாமாகப்பெற்றுக்கொள்ளவும். இச்சலுகை தமிழ்ப் புத்தாண்டு வரைக்கும்-மில்க்வைற். (4785)

**அரசின்**

நேற்று முன்தினம் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்ப்பது தொடர்பாகஇடம்பெற்ற கூட்டமொன்றில், மார்ச் மாதம் 14 ஆம் திகதி இராமர் கோயில் கட்டும் பணியை ஆரம்பித்து 100 நாட்களுக்குள் அப்பணி முடிவடையும் என்றும் விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பு உறுதியாகத் தெரிவித்துள்ளது. (உ-8)

# உல்லாசப் பயண விடுதிப்பாடசாலை யாழில் அமைப்பதற்கு நடவடிக்கை

## சுற்றுலாத் துறை அமைச்சர்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் உல்லாசப் பயண ஹோட்டல் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அரசின் நூறுநாள்வேலைத் திட்டத்தில் கீழேயே இவ் உல்லாசப் பயண ஹோட்டல் பாடசாலை அமைக்கப்படவுள்ளது.

இதன் மூலம் இங்குள்ள இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள ஹோட்டல்களில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

அத்துடன் உல்லாசப்பயணிகள் வரும் கடற்கரைகளில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ)

# வாக்காளர் அட்டைகள் இவ்வாரம் விநியோகம்?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகப் பணி ஒரு சில தினங்களில் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாக்காளர் அட்டைகளை பெரும்பாலும் இன்று உதவித் தேர்தல் ஆணையாளர் அலுலலகம் யாழ். பிரதம தபாலகத்தில் ஒப்படைக்கும் என்றும்,

அவ்வாறு ஒப்படைக்கும் பட்சத்தில் சில தினங்களில் விநியோகப்பணி ஆரம்பமாவது சாத்தியம் என்றும் கூறப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, வடக்கு கிழக்கில் இம்மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம்பெறும் என்று முன்னர் அறிவித்திருந்த போதிலும் கூட, அதுகுறித்த திட்டவட்டமான இறுதி முடிவு இன்னமும் தெரியவரவில்லை என்பதும், இந்நிலைப்பாடு மக்களை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-10)

## சிரமதானம்

எதிர்வரும் 9ம்திகதி சனிக்கிழமை காலை9மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகளிர் வித்தியாலயத்தில் சிரமதானப்பணி இடம்பெறவுள்ளது

இதில் பெற்றோர்நலன் விரும்பிகள் ஆசிரியர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அதிபர் எம். பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (உ-77)

## "மக்பெத்" ஆற்றுகை நேரம் மாற்றம்

திருமறைக்கலாமன்றம் நடத்தும் நாடக அரங்கியல் கண்காட்சியில் ஷேக்ஸ்பியரின் 'மக்பெத்' ஆற்றுகை பாடசாலை மாணவர்களின் நலன் கருதி இன்றும் நாளையும் மு.ப 10.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஊடகவியலாளர்களும்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு காரணம்

## யுனிசெவ் பிரதிநிதி

(கொழும்பு)

பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக உலகநாடுகள் பலவற்றிலும் இடம் பெற்று வரும் வன்முறைகளுக்கு ஊடகவியலாளர்களும் ஒரு காரணம்.

இவ்வாறு யுனிசெவ் அமைப்பின் இலங்கைப் பிரதி நிதி கொலின் ஜெனின் தெரிவித்துள்ளார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இத்தியாஸ்பக்கீர் மக்களையும் அமைச்சு அதிகாரிகளையும் சந்தித்து அண்மையில் கலந்துரையாடிய வேளையே இதனைத் தெரிவித்தார்.

இவர்களின் நலனைப்பேண ஊடகவியலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் இரு சாராருக்கும் இடையே கருத்தரங்குகளை நடத்தி கருத்துக்களைப் பரிமாற்றுவதன் மூலம் பெண்கள் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கவியலும் என்றும் அவர்மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ.8)

## 'சமாதான தீபம்'

# இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே நாட்டின் சமாதானத்திற்கான புரிந்துணர்வுஉடன்படிக்கையை வரவேற்று நிரந்தர சமாதானத்திற்கு வலியுறுத்தி நாளை வியாழக்கிளமை பிற்பகல் 7மணிக்கு நாடு முழுவதும் சமாதானதீபம் ஏற்றுவதற்கான அழைப்பை அனைத்து சமாதான அமைப்புகள் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

சமாதான தீபம் ஏற்றுவது தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று பிற்பகல் 4மணிக்கு கோவில் வீதியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையகாரியாலயத்தில் நடை பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து அங்கத்துவ நிறுவனங்களையும் கலந்து கொள்ளுமாறு அ. கி. சிவசுப்பிரமணியம் வேண்டுகோளவிடுத்துள்ளார் (வ)

# மாணவர் மத்தியில் புராணபடன போட்டி

(கொழும்புத்துறை)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி புராணபடனப் போட்டியொன்றினை பாடசாலை மாணவர்களிடையே நடாத்த உத்தேசித்துள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு, ஆகியபிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிக்கான சுற்றுநிருபம் விரைவில் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-223)


பருத்தித்துறை நகராட்சி மன்றம்

**காணி கொள்ளல்**

**அறிவித்தல்**

இதனகத்து அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தை நகரின் எதிர்கால அபிவிருத்தித் தேவைகளுக்காகக் கொள்வனவு செய்வதற்கு பருத்தித்துறை நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளது.

தற்காலம் கொழும்பு 06, உருத்திரா மாவத்தை, 10/2 என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி அன்னலட்சுமி இராசரத்தினம், கொழும்பு 06, விவேகானந்தா வீதி, 53 பி என்னும் முகவரியில் வசிக்கும் திருமதி நிர்மலாதேவி நடராஜா ஆகிய இருவரும் கீழ் விபரிக்கப்படும் ஆதனத்திற்கான உரிமை கோரியுள்ளனர்.

இவ்வாதனத்திற்கு சட்டபூர்வ உரிமைகோருவோர் வேறு எவராவது உளரேல், அவர்கள் தமது உரிமைக் கோரிக்கைகளுக்கான ஆதாரங்களுடன் 2002.03. 25ந் திகதிக்கு முன்னர் இப்பணிமனைக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவஞ்சல் மூலம் 'தலைவர், நகரசபை, பருத்தித்துறை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இத்தால் அறியத்தருகின்றேன். குறித்த கால அவகாசத்தின் பின்னர் கிடைக்கும் உரிமைக் கோரிக்கைகள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டாது.

**அட்டவணை**

01) வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று பருத்தித்துறை 'சிங்கபாகுதேவன்' குறிச்சியிறை தெங்கன் கிணற்றடி நிலப்பரப்பு 26 ம் மேற்படி நிலப்பரப்பு 83 7 8 இப்பிரிவுகளில் ஆட்சிப்படி நிலப்பரப்பு 12 7 8 இதில் தெற்குப்புறமாக வுள்ள 2/3 பங்கில் தெற்குப்பக்கமாக 1/3 பங்குக்கு அளவின்படி நில பரப்பு 2 குளி 14½ இது 1964.09.27ந் திகதி உலாந்தா மேஸ்தர் கே. சதாசிவத்தால் 38 ஏ என்னும் இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட படத்தின்படி நிலப்பரப்பு3 குளி 26,32 இதில் குறித்த படத்தில் 2 ம் நம்பர் துண்டுக்கு நிலப்பரப்பு 01 குளி 14 04/32 அதற்குட்பட்ட கடைக்கட்டிடங்களும் கல்வீடு, கிணறு, தென்னை கமுகுகளும் இதற்கெல்லைகள்:-

கிழக்கு வெள்ளவாய்க்கால், வடக்கு அம்பலவாணர் யோகநாதனுக்கும் மனைவி ராசநாயகிக்குமுடைய வாதனம். மேற்கு குறித்த படத்தில் நிர்மலாதேவி நடராஜாவிற்குரிய1ம்இலக்கத்துண்டு. தெற்குதும்பளை வீதி, இவ்வெல்லைக்குட்பட்ட நகராட்சி மன்றபதிவேடுகளின் படியான 4ம் வட்டாரம் 37, 41, 45, 49, 51, 53 ஆதன இலக்கமிடப்பட்ட ஆதனங்கள்.

02) மேற்குறிப்பிட்ட ஆதனத்தில்குறித்த 38 ஏஇலக்க நில அளவைப்படத்தில் 1 ம் இலக்கத் துண்டெனக் குறிப்பிடப்பட்டுள்ளதும் நகரசபைப் பதிவேடுகளில் 4 ம் வட்டாரம் தும்பளை வீதி 29 ம் இலக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுமான ஆதனம் இதற்கு குறிப்பிடப்பட்ட நில அளவைப் படத்தின்படி நிலப்பரப்பு 01 குளி 4 22/32 ஆகும். இதற்கெல்லைகளாவன:-

கிழக்கு குறித்த நில அளவைப்படத்தில் 2 இலக்கத் துண்டெனக் குறிப்பிடப்பட்டதும் தற்காலம்இராஜரட்ணம் அன்னலட்சுமிக்குரியதுமான ஆதனம். வடக்கு அம்பலவாணர் யோகநாதனுக்கும் மனைவி ராசநாயகிக்கும் உரிய ஆதனம். மேற்கு இரண்டாம் குறுக்கு வீதி, தெற்கு தும்பளை வீதி.

**அ வின்சன் கெனடி· ஜே·பி யூ.எம்**
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.

(சி 3654)


# இராசி பலன்

6.3.2002
(மாசி22புதன்கிழமை)
அட்டமி ந.இ12.52வரை
கேட்டை பி.இ 4.05வரை
ராகுகாலம்-12.26-1.56
நல்லநேரம்-4.56-6.26
அட்டமி, நவமி

**மேடம்**
காரிய தாமதம், வீண்தொல்லை, அமைதிக்குறைவு, திடீர் நன்மை.

**இடபம்**
வாகனசுகம், தொழில்நன்மை, முயற்சிகை கூடும், நண்பர்கள உதவி.

**மிதுனம்**
ஆரோக்கியம், காரிய அனுகூலம், உறவினர் உதவி, சந்தோசமானசம்பவம்.

**கடகம்**
தாழ்ந்தசுபாவம், வியாபார நன்மை, மனச்சஞ்சலம, காரியதாமதம்.

**சிங்கம்**
ரோகபயம், தன்நம்பிக்கைக்குறைவு, விரும்பாத உறவு, தர்மம்

**கன்னி**
நினைத்தகாரியம் கைகூடும் அன்னியர்சந்திப்பு, சகோதரர் உதவி, கூட்டுமுயற்சி.

**துலாம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி, கௌரவக்குறைவு, ரோகம், காரியதாமதம்.

**விருச்சிகம்**
காரியசித்தி, பெரியோர் மதிப்பு, புதியபொருள் சேர்க்கை, சயனசுகம்.

**தனுசு**
உணர்ச்சிவசப்படல், பிதா சிந்தை, முயற்சி தாமதம், குடும்பசுகம்.

**மகரம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு உறவினர் வருகை காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி.

**கும்பம்**
களஸ்திரசுகம், தனலாபம், தொழில்சிறப்பு, காரியம் கைகூடும்

**மீனம்**
ஆன்றோர்மதிப்பு, தொழில்திருப்பம், உடல்நலக்குறைவு, மனச்சஞ்சலம்
(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


யாழ்ப்பாணம்- மாநகரசபை

**2002 ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம், வாகன, மிருக வரி உரிமம் பெறுவதற்கான**

**விண்ணப்பம்**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் 2002ஆம் ஆண்டிற்கான வியாபார உத்தரவுப் பத்திரத்தை எதிர்வரும்31.03.2002ந் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளவும். கடந்த காலங்களில் உரிய கட்டணங்களை செலுத்தாதவர்கள் இவ்வாண்டிற்கான கட்டணத்துடன் பழைய நிலுவைகளையும் செலுத்துதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் உத்தரவுப் பத்திரம் பெறத் தவறியோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**இ.இராமலிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பா
2002.3.04.

(சி 3655)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி

# ஒதுக்கல் விவகாரம் ஜயலத் கையில்

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி அரசாங்கத்தின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்களிற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான நிதி, பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்களிற்கான நிதி ஒதுக்கீடுகளும், அதன் செயல் திட்டங்களைக் கண்காணிக்கும் பொறுப்பும் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் வடபகுதிபாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி சம்பந்தமான விவகாரங்களை அகதிகள் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவே கவனிக்கப் போவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களிற்கான திட்டங்கள் தொடர்பாக அவ்வவ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அரச அதிபர்கள் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## ஆலயம் சென்று வந்தோர்
## மாலுசந்திப் பகுதியில் விபத்தில் படுகாயம்

(மந்திகை)

ஆலய தரிசனப் முடித்து வீடு திரும்பிக்கொண்டிருந்தோர் விபத்தில் படுகாயமடைந்தனர்.

கடந்த ஞாயிறன்று நண்பகல் வேளை, வல்லிபுரக் கோயிலுக்கு சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த அல்வாய் மேற்கு திக்கத்தைச் சேர்ந்த கா. கிருபாகரன் (வயது- 19) யோ. சுரேஸ் (வயது- 19) ஆகிய இருவருமே மாலுசந்திப்பகுதியில் ஏற்பட்ட மோட்டார்சைக்கிள் -சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் சுரேஸ் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (உ-23)

## தரம்பிரிக்கும்பணி பல்வேறு பாகங்களுக்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

பல்வேறு பிரதேசங்களிலிருந்துவரும் தபால்களை பிரிக்கும் பணிகளை மத்திய அஞ்சல் பரிவர்த்தன நிலையம் இவ்வளவு காலமும் செய்து வந்தபோதிலும், அதனை ஏனைய பாகங்களிற்கும் இனிமேல் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இவ்வாறு 100 நாள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக செய்தியாளரிடம் விளக்கிய போது, தபால்மா அதிபர் டபிள்யூ. எல். பிஜதாஸா தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள மாங்குளம் உப தபாலகத்தை, தபாலகமாக மாற்றும் நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

100 நாள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தொலைபேசி வசதி இல்லாத 3 ஆயிரத்து 450 கிராமப்புற உப தபாலகங்களிற்கு தொலைபேசி இணைப்புக்களும் தொலைநகல் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (உ-8)

## கசிப்பு வைத்திருந்த மூன்று பெண்களிடம் குற்றப்பணம் அறவீடு

(மந்திகை)

சட்டவிரோதமாக வீட்டில் மதுபானம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதன்பேரில் மூன்று பெண்களிடம் யாழ். நீதிமன்றம் குற்றப்பணம் அறவீடு செய்துள்ளது.

கடந்தவாரம் சுன்னாகம் மதுவரிப் பரிசோதகர்கள் ஊரெழு, உரும்பிராய், சுன்னாகம் பகுதிகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டபோது 4பெண்களை, கசிப்பு வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்தனர்.

இவர்களில் மூவரை நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, அவர்களிடம் இருந்து மொத்தமாக 40 ஆயிரம்ரூபா குற்றப்பணமாகவும் 8 ஆயிரம் ரூபா தருமப்பணமாகவும் அறவிடப்பட்டது. (உ-23)

## உள்ளூராட்சி தேர்தல் கூட்டை நியாயப் படுத்துகிறார் அமைச்சர் ஆறுமுகம்

(கொழும்பு)

சிங்களப்பேரினவாதக் கட்சிகளின் கீழ் ,ஒடுக்கப்பட்டுவந்த சிறுபான்மை இனதமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுதிடசங்கற்பம் பூண்டுள்ளமையாலேயே இம்மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அக்கட்சியுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து போட்டியிட முன்வந்துள்ளது.

இவ்வாறு வட்ட வீடத்தில் நடை பெற்ற பிரசாரக் கூட்டத்தில் வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இக்கட்சிஆட்சிக்கு வந்தநாளிலிருந்து இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான விடயங்களில் அயராது பாடுபடுகிறது என்பதுடன் 100 நாள் அபிவிருத்தி திட்டம் ஒன்றையும் முன்வைத்துஅதன்கீழ் பலஅபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்தியவம்சாவளி மலையகத்தமிழர்களின் பிரச்சினைகள் குறித்தும்சரியான தீர்வை அவ்வரசு மேற்கொள்ளும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-8)

## கைத்தொழில் முயற்சியாளர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றுஎதிர்வரும் 15ம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10. 00மணிக்குயாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தொழில்துறை திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் குடாநாட்டிலுள்ள கைத்தொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பல்வேறுபட்ட திட்டங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ- 10)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து

# கிழக்கில் நிர்வாக கட்டமைப்பை மீளமைப்பதில் புலிகள் ஆர்வம்

(கொழும்பு)

புரிந்துணர்வு யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டதை அடுத்து வடக்கு -கிழக்கு மாகாணங்களில் நிர்வாகக் கட்டமைப்பை மீள் ஒழுங்கு செய்வதில் விடுதலைப்புலிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

கிழக்குமாகாணத்தில்உள்ள அரச அலுவலகங்களின் உயர் அதிகாரிகள், பாடசாலைஅதிபர்கள் விடுதலைப் புலிகளால் அழைக்கப்பட்டு தத்தமது நிர்வாக அமைப்பை சீராக்கி மக்களுக்கு சிறந்த சேவையாற்ற வேண்டும்என கேட்கப்பட்டுள்ளனர்.

அலுவலகங்களுக்கு ஊழியர்கள் காலை 9.00 மணிக்கு சமுகமளிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் காலை 8.00 மணிக்கு முன்னர் பாடசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் என்றும்,

மேலதிக ஆசிரியர்களை வைத்திருக்கும் பாடசாலை அதிபர்கள், பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு அவர்களை அனுப்பவேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர். (உ-3)

## செய்தித் துளிகள்

### மரக்கறிமலிவு

(கல்வயல்)

கொடிகாமம் சந்தையில் மரக்கறிகள் மலிவாகக் கிடைப்பதாக அங்குமீளக்குடியமர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

விடத்தற்பளை, கச்சாய், அல்லாரைப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்த விவசாயிகள், குறுகிய காலத்தில் பயன்தரவல்ல மரக்கறிப் பயிர்வகைகளை பயிரிட்டதாலேயே இவ்வாறு மரக்கறிகள் மலிவாகக் கிடைப்பதாகவும் கூறப்படுகிறது. (உ-111)

### பங்குனித்திங்கள் உற்சவம் 18ஆம் திகதி

(தென்மராட்சி)

பிரசித்திபெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் பங்குனித்திங்கள் உற்சவம் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இவ்வருட ஆலய உற்சவம் தொடர்ந்து நான்கு திங்கள் இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா சி. சிவகுரு தெரிவித்துள்ளார். (உ-77)

### பட்டமளிப்பு விழா

(கொழும்புத்துறை)

அகில இலங்கை சைவபபுலவர் சங்கத்தால் 2001 ஆம ஆண்டு நடத்தப்பட்ட சைவப்புலவர் தேர்வுகளுக்கு தோற்றி சித்தி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும், சைவப்புலவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டமும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளன (உ-223)

### மகளிர் தினவிழா

(தென்மராட்சி)

வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் சர்வதேச மகளிர்தின விழா எதிர்வரும் 8 ஆம் திகதி பருத்தித்துறையிலுள்ள சத்துணவுக் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி தவமணி பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் - பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் பொ. சிவபாதம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் 'பெண்மையின் பேராற்றல்' எனும் பொருளில் செல்வி வைரமுத்து யோகேஸ்வரி சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (உ-77)

### பொருளியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று பி. ப. 3.00 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் 'பொருளாதாரக் கொள்கைகளும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் என்றதலைப்பில் பொருளியல் துறைத்தலைவர் வி. பி. சிவநாதன் கருத்துரையாற்றவுள்ளார். (உ-10)

### குழி மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் காணப்பட்ட குழி மூடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், குமாரதுங்கவின் சிலையை நிறுவும்பொருட்டு வெட்டிய இக் குழி, போக்குவரத்துக்கு மிகுந்த இடைஞ்சலாய் இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-19)

### பூனையால் வந்தவினை

(மந்திகை)

மேசையில் இருந்தவிளக்கை பூனை தட்டியதால்அதன் அருகில்படுத்திருந்தநபர் எரிகாயங்களுக்குள்ளான சம்பவம்நெல்லியடியில் கடந்த சனி இரவு இடம்பெற்றுள்ளது.

இதேயிடத்தைச் சேர்ந்த சி. கேதீஸ்வரன் (வயது 20) என்ற இளைஞரே எரிகாயங்களுடன்பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

### ஆன்மீகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகம ஞானி அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின்5ஆவது ஆண்டுஞாபகார்த்தமாகசர்வதேச இந்துமதகுருபீட யாழ். மாவட்ட அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் ஆன்மீகப் பெருவிழா இம்மாதம் 28ஆம்திகதி கலாநிதிஸ்ரீ ஐயப்பதாஸசாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

### வருடாந்த உற்சவம்

(மந்திகை)

அல்வாய் மேற்கு தேவரையாளி கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆரம்பமாகிதொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. (உ-23)

### குடாநாட்டில் மாபெரும் கைத்தொழில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் யாழ். குடாநாட்டில் மாபெரும் கைத்தொழில் முயற்சிக் கண்காட்சி ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலான இக் கண்காட்சியில் வெளிநாட்டு நிபுணர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடற்றொழில் விவசாயம் கைத் தொழில் துறைகளில் ஈடுபாடுடையவர்கள் தங்கள் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தி பரிசில்களைப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### ஊடகவியலாளருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுத்துறை மற்றும் பொது விடயங்கள் தொடர்பான ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு ஒன்று இன்று மு. ப 10. 30மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (உ)

## கொழும்புத்துறைப் பகுதி ப. நோ .கூ. ச.கிளைகளை இயக்குவது பற்றி ஆராய்வு

கொழும்புத்துறை, பாசையூர்ப் பகுதிகளில் முன்னர் இருந்தயாழ்.ப.நோ.கூ.சங்க கிளைகளைமீண்டும் திறப்பது சம்பந்தமாகஆராய்ந்து வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பகுதிகளில் மக்கள் குடிபெயர்ந்து ... கொழும்புத்துறை கணக்கர் சந்திப் பகுதியில் முன்னர் இயங்கிய 22ஆம் இலக்ககிளையும், பாசையூரில் இயங்கிய 23 ஆம் இலக்கக் கிளையும் திறப்பது சம்பந்தமாகவே ஆராய்ந்து வருவதாக சங்க வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ-223)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செய்தித் துளிகள்

## வரவேற்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களை நடத்துவதென ஐ. தே. முன்னணியும் விடுதலைப்புலிகளும் செய்திருக்கும் முடிவை ஐக்கியத்திற்கும் சமாதானத்திற்குமான முன்னணி வரவேற்றுள்ளது.

ஐ. ஐ. மு. இதற்கு ஆதரவாக செயற்படுவதற்கு முன்வந்தமை உவகை தருவதாகவும் அது தெரிவித்துள்ளதுடன், இனப்பிரச்சினை தீர்வுக்கு பாரிய பிரச்சினையாக இருந்து வந்த குறுகிய கட்சி மனப்பான்மையுள்ள நாட்டின் சுதந்திரவரலாற்றில் இது முன்னெப்போதும் நிகழாததாகும் என்றும் அவ்வமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (உ)

### காவலூரில் கலந்துரையாடல்

(ஊர்காவற்றுறை)

யாழ் வந்துள்ள மக்கள் வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டிறெக் ஹெலி, பிரதிப் பொது முகாமையாளர் வி. கிமாரபத்திரன ஆகியோர் அடங்கிய குழுவினர் அண்மையில் ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளைக்கு விஜயம் மேற்கொண்டு வங்கி நடவடிக்கைகள், மற்றும் ஊழியரின் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்கள்.

இதேவேளை, மேற்படி கிளையின் செயற்பாடுகளினை விஸ்தரிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (உ-75)

## அறநெறிப் பாடசாலை மீள இயங்கும்

(யாழ்ப்பாணம்)

மீசாலை இந்து மன்றத்தினால் இயக்கப்பட்டு வந்த அறநெறிப் பாடசாலையை பழைய இடத்தில்மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி பாடசாலையில் கற்று வந்த மாணவர்களை பதிவுசெய்யுமாறும், முன்பள்ளி மாணவர்களின் பெற்றோரை தொடர்பு கொள்ளுமாறும் நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (உ-124)

## தொடர்பு கொள்க

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை யாழ்.சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுரேஷ்லால் சின்னத்துரை 694, கண்டி வீதி, யாழ்ப்பாணம். அல்லது சின்னத்துரை கதிர்காமம் மாணிக்கம் மனோன்மணி.

இரத்தினம் (பெ) எழுதுமட்டுவாழ். அல்லது அழகரட்ணம் லொய்ட்.

சுந்தரமூர்த்தி நாகபூசணி கரம்பன் மேற்கு ஊர்காவற்றுறை. (உ)

## புனரமைப்பு துரிதம்

(கொழும்புத்துறை)

யாழ். பொதுசன நூலகப் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருவதனை அவதானிக்க முடிகின்றது.

தற்சமயம் வர்ணம் பூசும் வேலைகளும், நிலைகள், கதவுகள் நாட்டும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (உ- 223)

# யாழில் பௌத்த விகாரைகளை திறக்க 70 பிக்குகளை ஏற்பாடு செய்து தர வேண்டும்

### மல்வத்தை மகாநாயக்கரிடம் பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கண்டிக்கு விஜயம் செய்து மல்வத்தை மகாநாயக்கதேரர் ஸ்ரீவிபசி ரம்புக்வெல மகாநாயக்கதேரரை சந்தித்தார்.

சந்திப்பின் போது அவர், வடக்கு-கிழக்கிலிருந்து பாதுகாப்புப் படைகள் மீளப்பெறப்படமாட்டாதென உறுதியளித்ததுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவேயென்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

வடக்கு மக்களும், தெற்கு மக்களும் இணைந்து கொண்டாடும் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் உலகப் புகழ் பெற்ற இலங்கையின் கிரிக்கெட் அணி யாழ்ப்பாணம் செல்லவுள்ளதுடன் பாகிஸ்தானின் கிரிக்கெட் அணியும் அங்குசெல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பல சினிமா தியேட்டர்களை திறக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது போரின் சுமைகளை தாங்கி வாழ்ந்த மக்கள் சற்று ஆறுதலடைய வேண்டும். பௌத்த விகாரைகளை மீண்டும் திறக்க வேண்டும். இதற்குத் தேவைப்படும் 70 பிக்குகளை மகாநாயக்கர் ஏற்பாடு செய்து தரவேண்டும். இவ்வாறு பிரதமர் அங்கு மேலும் தெரிவித்தார். (உ)

## கிராமத்திற்கு கிராமம் இதயத்திற்கு இதயம்

### சகோதர ஒன்று கூடல் மார்ச் 15-இல்

(கொழும்பு)

அநுராத புரத்தில் எதிர் வரும் 15 ஆம் திகதி கிராமத்திற்கு கிராமம் இதயத்திற்கு இதயம் என்னும் தலைப்பில் சகோதர ஒன்றுகூடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

இந்த ஒன்று கூடலுக்கு இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் மற்றும் சமூக அமைப்புக்கள் அனைத்தும் பூரண ஆதரவு வழங்க வேண்டும் என சர்வோதய அமைப்பின் தலைவர் ஏ. ரி. ஆரியரத்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நிகழ்வில் 15 ஆயிரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் கிராமங்களிலிருந்து ஐந்து இலட்சத்திற்கும் அதிகமானோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர். (செ)

## சிரமதானம்

(தென்மராட்சி)

கல்வயல் பகுதியில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தை மீளவும் அதே இடத்தில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ்வித்தியாலயம் கடந்த வாரம் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. (உ-77

★ ★

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மாபெரும் சிரமதானம் நடைபெறவுள்ளது.

இதில்கல்லூரிமாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளையும் பங்கு கொள்ளும் வண்ணம் கல்லூரி அதிபர் எம். நாகேந்திரராசா கேட்டுள்ளார். (உ-77)

## குருத்துவக் கல்லூரி இயங்குகிறது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித சவேரியார்குருத்துவக்கல்லூரி மீண்டும் தனது பழைய இடத்தில்இயங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு அனர்த்தங்களின் பின் இக்கல்லூரி பண்டத்தரிப்பில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

சேதமடைந்திருந்த இக்கல்லூரி புனரமைப்புச் செய்யப்பட்டு, கல்லூரி மாணவர்களின் கல்வியாண்டின் இரண்டாம் ஆண்டிற்கான விரிவுரைகள் கடந்த திங்கள் முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. (உ- 223)

### உருவப்படங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில், வணக்கத்திற்குரிய கலாநிதி டானியல் தியாகராஜா நைல்ஸ் அதிவணக்கத்திற்குரிய கலாநிதிசபாபதி குலேந்திரன் ஆகியோரின் உருவப்படங்கள நாளை வியாழக்கிழமை மு.ப.11.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறை விரிவுரை மண்டபத்தில்திறந்துவைக்கப்படவுள்ளன.

இறையியலுக்கும், திருச்சபைகளுக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணிகளுக்காக மேற்படி இருவரும் இக்கௌரவத்தைப் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## வைத்திய வசதியின்றி தென்மராட்சி மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி மக்கள் மீளக் குடியமர்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்ற போதிலும், அங்கு வைத்திய வசதிகள் இல்லாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இம் மக்கள், வைத்திய வசதிகளைப் பெற கைதடி, யாழ்ப்பாணம், வரணி, மந்திகை ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் செல்லவேண்டியுள்ளது. (உ-124)

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணம் ஜனாதிபதிக்கு கிடையாது

### பழ. நெடுமாறன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற உண்மையான எண்ணம் இலங்கை ஜனாதிபதிக்கு இல்லை என்று தமிழ்நாடு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாகச் செயற்பட்டு வரும் இலங்கைஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளை இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்த அவர்,

இலங்கை ஜனாதிபதியே ஆரம்பித்து வைத்த சமாதான நடவடிக்கைகளை அவரே குழப்ப முனைவது வேடிக்கையாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இவரின் இத்தகைய முட்டுக்கட்டை முயற்சிகளை சர்வதேச சமூகமும் கடுமையாக எதிர்க்கவேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## ரஷ்ய பல்கலையில் மருத்துவப் படிப்பை மேற்கொள்ள வசதி

(யாழ்ப்பாணம்)

ரஷ்யாவிலுள்ள கேர்ஸக் அரச மருத்துவ பல்கலைக் கழகம் (The Kursk State Medical University) மருத்துவப் படிப்புக்களை மேற்கொள்ளத் தகுதியான ஏனைய நாட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம்திகதி ஆரம்பமாகவுள்ள இக் கற்கை நெறியைப் பயிலவோரிடமிருந்து

- முதலாவது வருடத்திற்கு 3 ஆயிரத்து 500 அமெரிக்க டொலரும்,
- இரண்டாவது வருடம் தொடக்கம் 6 ஆவது வருடம் வரை வருடாந்தம் 3 ஆயிரம் அமெரிக்க டொலரும்,
- விடுதிக் கட்டணமாக வருடமொன்றிற்கு 150 அமெரிக்க டொலரும்,
- வாழ்க்கைப் படியாக மாதமொன்றிற்கு 50டொலர்களும் கட்டணமாக அறவிடப்படும்.

மேற்படி மருத்துவப் படிப்புகளை மேற்கொள்ள விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-5)

## அரசியற் சட்ட நெருக்கடி என்னால் தணிந்தது

### எஸ். பி. இறுமாப்பு

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சை தந்ததன் மூலம் நிறைவேற்று ஜனாதிபதிக்கும், நாடாளுமன்றத்திற்குமிடையே எழவிருந்த அரசியற்சட்ட நெருக்கடி தணிந்து போயுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்தே ஜனாதிபதி இம்முடிவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார் என அமைச்சர் எஸ் பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திட்டம் 1989 இல் எனது மூளையில் உதித்ததொன்று. இதனை என்னிடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி தயங்கியதற்கு காரணம் அதன் மூலம் சக்திவாய்ந்த அரசியற் தளம் ஒன்றை அமைக்க முடியும் என்பதே.

அவர் சட்டமா அதிபருக்கும், லஞ்ச ஆணையாளருக்கும் கூட என்னைப்பற்றிய முறைப்பாடுகளை அனுப்பி வைத்தார். எதுவும் பலிக்கவில்லை.

சமுர்த்தி திட்டம் 2003ஆம் ஆண்டில் முழுமையாகத் தொழிற்படத் தொடங்கும். மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாண்டில் இதனை பெருமளவில் முன்னெடுக்க முடியாது எனவும் அமைச்சர் திஸநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (உ)

### சைவப்புலவர் தேர்வு

(கொழும்புத்துறை)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் வருடாந்தம் நடத்தும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள்எதிர் வரும் ஏப்ரல் மாதம் 27 ஆம், 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக சைவப் புலவர் சங்கச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார். (உ-223)

## துணைவேந்தரின் மணிவிழா 10ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் மணிவிழா எதிர் வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை மணிவிழா செயலாளர் இ. இரட்ணமும், ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர்ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தர நாயகமும் வழங்குவர்.

இந்நிகழ்வில் மணிவிழா மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (உ-5)

# இன்று ஒரு தகவல்

## வரம் கொடுத்தவர் பாடு

வரம் கொடுத்து விட்டு மாட்டிக் கொண்டு விழிக்கிறதென்பது எல்லா இடத்திலும் இருக்கும் போலிருக்கிறது. பத்மாசுரன் கதை தெரியுமல்லவா? பலருக்குத் தெரிந்த விஷயம் தான். அவன் ஓர் அரக்கன், வலிமையுள்ளவன், முனிவர்களையெல்லாம்அடிக்கடி தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தான். நாரதருக்கு இந்த விஷயம் தெரிந்தது சும்மா இருப்பாரா? உடனே புறப்பட்டு வந்தார். பத்மாசுரனைப் பார்த்தார், என்னப்பா? எப்படி இருக்கிறாய்? என்று விசாரித்தார்.

உம்மைப் போல் சாதுவாக இருந்துவிட்டால் உலகத்தில் ஒரு தொந்தரவும் இல்லை. என்னைப் போல் இருப்பதால் ஏகப்பட்ட கஷ்டம். எங்களை அழித்துவிடவேண்டும் என்றே எல்லோரும் நினைக்கிறார்கள். எங்களுக்கு யாரும் மரியாதை கொடுப்பதில்லை என்று குறைபட்டுக் கொண்டான் பத்மாசுரன். உடனே நாரதர் அதற்கு ஒரு வழி சொன்னார். 'இதோ பாரப்பா இதற்கு ஏன் இப்படிப் பெரிதாகக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாய் வரம் கொடுப்பதற்கு எப்போதும் தயாராக இருப்பவர் சிவன். அதனால் நீ அவரை நினைத்துத் தவம் செய் உடனே அவர் வந்து விடுவார். என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். ஏதாவது ஒரு வரம் கேள் அப்புறம் உனக்கு மரியாதை அதிகமாகிவிடும் என்றார். 'என்ன வரம் கேட்பது?' என்றான் அவன். எதிரிகள் எல்லோரும் உன்னைக்கண்டு பயப்பட வேண்டும். உனக்கு வரம் கொடுத்த சிவனே உன்னைக்கண்டு பயப்படவேண்டும் அது போல் ஒரு வரம் கேட்டு வாங்கிக்கொள்! என்றார் நாரதர்.

'எப்படி வரம் வாங்கினால் ... எல்லோரும் பயப்படுவார்கள்?' என்று கேட்டான். 'அதாவது... உன்கையை யார் தலையில் வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாகிவிடவேண்டும் என்பது போல ஒரு வரத்தை வாங்கிக் கொள்' என்றார் 'சரி' என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டுப் போனான். கடுமையாகத் தவம் இருந்தான். சிவபெருமான் வந்து முன் நின்றார்.

'பத்மாசுரா! உன்தவத்தை மெச்சினேன். என்ன வரம் வேண்டும் கேள்!' என்றார். 'நான் யார் தலையில் கையை வைத்தாலும் உடனே அவர் எரிந்து சாம்பலாகிவிடவேண்டும்என்றார். 'சரி! அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி வரம் கொடுத்துவிட்டு அவர் போய்விட்டார். பத்மாசுரன் மிக்க சவடாலாக நடந்து வந்து கொண்டிருந்தான். வழியில் நாரதர் வந்து கொண்டிருந்தார். விஷயத்தைச் சொன்னான். 'அது சரி! அவர் நிஜமாகவே வரம் கொடுத்தாரா? அதை நீ சோதித்துப் பார்த்தாயா?' என்று கேட்டார். அவன் எப்படிச் சோதிப்பது என்று கேட்டான்.

'இது என்ன பெரிய விஷயம்? யார் தலையிலாவது கையை வைத்துப் பார்க்கவேண்டியது தானே' என்றார். 'அப்படியென்றால் நீங்கள் தான் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும். உங்கள் தலையைக் கொஞ்சம் காட்டுங்கள்' என்றார். 'இது ஏதடா வம்பாகப் போயிற்றே' என்று எடுத்தார் ஓட்டம். இருந்தாலும் போகிற போக்கில் ஒரு யோசனையைச் சொல்லிவிட்டு ஓடினார். 'என்னைச் சாம்பலாக்கி விட்டாயானால், அதன்பின் உனக்கு ஆலோசனை சொல்வதற்கு ஆள் இருக்காது... அதனால் உனக்கு வரம் கொடுத்தவர் தலையிலேயே கையை வைத்துப் பார்! பலிக்கவில்லை என்றால் அவரையே பிடித்துக் கொள்ளலாம்' என்றார். அதுவும்சரிதான் என்று அவன் சிவனைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

நாரதர் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடி வந்து திருமாலிடம் விஷயத்தைச் சொன்னார். உடனே திருமால் புறப்பட்டுச் சிவனிடம் ஓடினார். அங்கே போனால் பத்மாசுரன் அவரைத் துரத்திக்கொண்டிருக்கிறான்- திருமால் யோசித்து ஒரு அழகான பெண்ணாக மாறினார். மோகினி உருவம் பத்மாசுரன் பார்த்தான். கிட்ட ஓடி வந்தான். 'என்னைக் கல்யாணம் செய்து கொள்' என்றான். 'சரி செய்கிறேன். அதற்கு முன்னர் நீ போய் நன்றாகக் குளித்துவிட்டு எண்ணெய் தடவிக்கொண்டு வா!' என்றாள் அந்த மோகினி.

பத்மாசுரன் குளிப்பதற்கு ஓடினான். ஆற்றில் இறங்கினான். தலையைத் தேய்ப்பதற்காகத் தன் கையைத் தன் தலையிலே வைத்தான். அவ்வளவு தான் வரம் பலித்து விட்டது. ஆள் எரிந்து சாம்பல் ஆகிவிட்டான். அப்பாடா! என்று எல்லோரும் நிம்மதியாக மூச்சுவிட ஆரம்பித்தார்கள். வரம் கொடுத்து விட்டு மாட்டிக்கொண்டால் இப்படியெல்லாம் செய்து தான் தப்பிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான சொல்வது, அவசரப்பட்டு வரம் கொடுப்பதும், வாக்குக் கொடுப்பதும் தவறு. எப்போதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அன்றைக்கு அப்படித்தான் ஒருவர் என்னிடம் வந்தார். மனிதநேயம் என்றால் என்ன என்று கேட்டார். ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது என்றேன். அது மிகவும் அவசியமா? என்றார். 'ஆமாம்!' என்றேன். அப்படியென்றால் ஒரு ஐம்பது ரூபா கைமாற்றுக் கொடுங்கள்!' என்று வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# போராட்டத்தை சித்திரிக்கும் ஆக்கம் உருவாகவேண்டும்

### கலைஞர்கள் மத்தியில் கரிகாலன்

(மட்டக்களப்பு)

தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை சித்திரிக்கும் காத்திரமான கலை ஆக்கங்களை உருவாக்க படைப்பாளிகள் முன்வரவேண்டுமென மட்டு-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் கொக்கட்டிச்சோலை அரசியல்பணிமனைக்கு கவிஞர்கள், எழுத்தாளர்களை அழைத்து உரையாடிய போதே அவர் இந்த வேண்டுகோளைவிடுத்தார்.

அங்குஅவர் மேலும் உரையாற்றுகையில், தமிழினத்தின் பாரம்பரிய கலைகள தற்போது அழிந்து வருகின்றன. எமது இனத்தின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்தும் கலைகளை அழியாது பாதுகாப்பது அனைவரதும் கடமையாகும்.

இன்றைய சூழலில் காத்திரமான கவிதைகள், சிறுகதைகளை எமது மண்ணிலிருந்து உருவாக்க இளம்எழுத்தாளர்கள முன்வர வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். (ந-5)

### இரு பெரும் கட்சிகளும்

# கருத்து ஒருமித்தாலன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வில்லை

### எச்சரிக்கிறது கம்யூனிஸ்ட் கட்சி

(கொழும்பு)

சமாதான வேலைத்திட்டத்தின் மீது,இரு பெரும் கட்சிகளும் கவலையேதுமின்றி தமக்குள் மோதிக்கொண்டிருப்பதை நாடு தாங்காது.இரு கட்சிகளினதும் கருத்தொருமித்த நிலைப்பாட்டினடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைதல் சாத்தியம்.

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் டியூ குணசேகரவிடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலின் பின்னர், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வொன்றை காண்பதற்கு உயர் முன்னுரிமை வழங்குமாறு புதிய அரசைகட்சிகோரியிருந்தது.

அத்துடன், குறுகியநோக்கும், வெறிபிடித்த செயற்பாடும் கொண்டவர்களின் சதிவலைக்குள் அகப்படவேண்டாமென்று முற் போக்கு சக்திகளிடமும் கேட்டிருந்தது.

இரு பெரும் கட்சிகளுமாவது ஒருமித்தகருத்துடன் செயற்பட்டாலன்றி இனப்பிரச்சினை தீர்க்கப்படமாட்டாதென்று கம்யூனிஸ்ட் கட்சி விடாப்பிடியாக கூறிவந்துள்ளது

கடந்ததேர்தலில் மக்கள் தமது ஆணையை ஐ. தே. மு. அரசுக்கு வழங்கிவிட்டனர். தேசியகருத்தொருமிப்பு உடனடியான தேவையாகும்.

இந்தப் பின்னணியிலேயே போர் நிறுத்த ஒப்பந்தத்தை கட்சி பார்க்கிறது. சுதந்திரத்திற்கு பிந்திய வரலாற்றின் தீர்வு முயற்சிகள் யாவும் இரு கட்சிகளினதும் பொதுக் கருத்து இன்மையினாலேயே தோல்வியடைந்தன. இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது. (உ)

# மீட்கப்பட்ட சிறுமி பெற்றோரிடம்ஒப்படைப்பு

(திருகோணமலை)

கொட்டாஞ்சேனையில் இனம் தெரியாத நபர்களினால் கடத்திச்செல்லப்பட்டு பின்னர் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்ட மூன்று வயதுச்சிறுமி செந்தில் பிருந்தா கடந்த சனியன்று விடுதலைப்புலிகளின் திருமலைமாவட்ட தலைமைச் செயலகமான சம்பூரில்வைத்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஐங்கரன் மற்றும் மகளிர் அணியின் அரசியல் துறைப் பொறுப்பாளர் கிருஸ்ணா ஆகியோரால் பிரஸ்தாப சிறுமி பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ந-4)

# பயனுறுவகையில்அமைந்த நடமாடும் சுகாதார சேவை

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினரின் முதலாவது இடம்பெயர் சேவை குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இச்சேவையின்போது,மாநகர முதல்வர் செ.கந்தையன், சுகாதாரக் குழுவின் தலைவர் எம். மங்களநேசன், மாநகர சபை உறுப்பினர்கள்,த.சுபத்திரன்,பப்பா ஆகியோர்பங்கு கொண்டிருந்தனர்.

இந்தஇடம்பெயர் சேவையின் போது அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளுக்கு சுகாதாரப்பகுதியினரால் உடனுக்குடன் தீர்வுகாணப்பட்டது.

அத்துடன் சுகாதாரப் பகுதியின் மருத்துவ மாதுக்களால் குடும்பவிபரங்களும் திரட்டப்பட்டன. (உ-77-19)

# நெல்லுக்கு நியாயவிலை; விவசாயிகள் மறியல்போர்

(வவுனியா)

நெல்லுக்கான நியாய விலையைப் பெற்றுத் தரக்கோரி மன்னார் முருங்கன் விவசாயிகள் நேற்று முன் தினம்மறியற்போராட்டத்தில்ஈடுபட்டனர்.

முருங்கன் விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மறியற் போராட்டத்தில் சுமார் 500 விவசாயிகள் முருங்கன் சந்தியின் நடுவே அமர்ந்திருந்து 3மணி நேரம் கோசங்களை எழுப்பியவாறு மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் வீதிப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டது.

இதேவேளை தமது,கோரிக்கைகளுக்கு ஒருவார காலத்தினுள் சாதகமான பதில் தராவிடின் மன்னார்மாவட்டத்திலுள்ள அனைத்து அரச செயலகங்களையும் செயலிழக்க செய்வதென சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

மேற்படி போராட்டம் தொடர்பானமகஜர் ஒன்றும் மன்னார் மாவட்ட அரசஅதிபருக்கும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மறியற் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டார்.விவசாயிகளின் கோரிக்கை தொடர்பாக விவசாய அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார் (இ-5)

# புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் பிரிவுத் தேர்தலும் கடந்த ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடை பெற்றது.

புதுவருட நிர்வாகிகளுக்கான தேர்தலில் கீழ் வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்வைத்தியகலாநிதி, வை.தியாகராசா, செயலாளர் இ.மயில்வாகனம், செயற்குழு உறுப்பினர்களாக எஸ்.ஜே.செல்லத்துரை, க.இராசதுரை, சீ.கதிர்காமநாதன்,க.செல்வரத்தினம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# நிர்வாகசபை தெரிவு

(அராலி)

தொல்புரம்-மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயநிதி சங்கத்தின் இவ்வாண்டுக்கான பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது, தலைவராக தி.உதயசூரியனும்,செயலாளராக க. வாமதேவனும், உபதலைவராக க. தட்சணாமூர்த்தியும் தெரிவு செய்யப்பட்டனர். (உ- 214)

● ● ● ●

(அராலி)

தொல்புரம் -விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்அண்மையில் இடம்பெற்ற போது,

தலைவராக தி. உதயசூரியன், செயலாளராக த. மாலசுதன், உபசெயலாளராக சி. சிவநாதன், பொருளாளராக த. சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். (உ- 214)

● ● ● ●

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் நடப்பாண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக நா.வரதராஜா, செயலாளராக தி. கதிர்காமநாதன், பொருளாளராக ம. பிரதீபன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-19)

# மகளிர் தின விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர் தினம் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் யா-கனகரத்தினம் ம.ம. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையின் முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் சிறப்பு விருந்தினராக யா-கனகரத்தினம் ம. ம. வி. அதிபர்வி மாணிக்கமும்கலந்து கொள்ளவுள்ளனர். (உ-9)

# சிந்தனைக்கு விருந்து

**அந்த நாள் ஞாபகம் வந்ததே!**

ஆதி மனிதர் நிர்வாணம்  
ஆக வாழ்ந்தனர் நாகரிகம்  
ஏதும் இல்லா நாள்கள் அவை  
இன்றோ உடைவகை எத்தனையோ!  
காதலர் தினத்தில் காண்போர்கண்  
களிக்கச் சிலகா தற்சோடி  
ஏதும் உடைகள் தரிக்காமை  
ஏனோ அந்த நாள் நினைப்போ?

'பழையவன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் அமைப்பில் இருந்து சிம்பாவேயை நீக்க முயற்சி

(கராரே)
சிம்பாவேயில் இடம்பெற்ற அதிபர் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றதாகக் கூறி கொமன்வெல்த் நாடுகள் சிம்பாவேயை அந்த அமைப்பிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகின்றன.

அதிபர் றொபேட் முஹாபே தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காக வன்முறையை கட்டவிழ்த்து விட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சிம்பவேயை இந்த அமைப்பிலிருந்து நீக்கும்முகமாக பிரித்தானியாவும் கனடாவும் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக அந்த இரு நாடுகளுடனும் தென்னாபிரிக்காவும், நைஜீரியாவும் விவாதித்து வருகின்றன.

தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கைகளை பரிசிலிக்க கொமன்வெல்த் அமைச்சர்களின் குழுக் கூட்டமொன்றை விரைவில் கூட்டுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. (உ-5)

## செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் தாராளம்

(வாஷிங்டன்)
செவ்வாய்க் கிரகத்தில் பெருமளவு தண்ணீர் இருப்பதை அமெரிக்காவின் விண்வெளி ஓடம் கண்டுபிடித்துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் 'ஒடிசி' என்ற சிறிய விண்வெளி ஓடம் ஒன்றை செவ்வாய்க்கு அனுப்பி ஆராய்ச்சி நடத்தி வருகின்றது.

அவ்விண்வெளிஓடம் அனுப்பியுள்ள படங்களில் இருந்தே அங்கு பெருமளவு தண்ணீர் இருப்பது கண்டு அறியப்பட்டுள்ளது.

செவ்வாய்க் கிரகத்தின் தரைப்பகுதியில் மூன்று அடி உயரத்திற்கு ஐஸ், தூசி, துகள் மற்றும் பாறைகளுடன் தண்ணீர் கலந்துள்ளது. (செ)

## இஸ்ரேல் படையினர் அகதிமுகாம்மீது தாக்குதல்

(ஜெருசலேம்)
இஸ்ரேலியப் படையினர் ஜெனிம் பகுதியிலுள்ள அகதிமுகாம்கள்மீது மீண்டும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின்போது பலஸ்தீனியப் படையினர் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அண்மையில் பலஸ்தீனிய அமைப்புக்கள் இஸ்ரேலியப் படைகள் மீது நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த பதினேழு மாதங்களாக இவ்விரு நாடுகளுக்கிடையிலும் நடந்துவரும் மோதல்களில் ஆயிரத்து இருநூறு பேர்வரை கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## நீச்சல் போட்டியில் உலக சாதனை படைக்க இயன்தோர்ப் முயற்சி

(சிட்னி)
நீச்சல் போட்டியில் உலக சாதனை நிகழ்த்த இயன்தோர்ப் கடும் முயற்சி மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின்பிரபல நீச்சல் வீரரான இவர், இவ்வருட நடுப் பகுதியில் இங்கிலாந்தில் நடை பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில் ஏழு தங்கப் பதக்கங்களையும் வென்றெடுப்பதற்கானமுயற்சில் ஈடுபட்டுள்ளார்.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக்நீச்சல்போட்டியில் இயன்தோர்ப் மூன்று தங்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## அமெரிக்கஹெலிஆப்கானில் சுட்டு வீழ்த்தப் பட்டது

(வாஷிங்டன்)
ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் அமெரிக்காவிற்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று தீவிரவாதிகளால் சுட்டுவீழ்த்தப் பட்டுள்ளது.

அல்செய்டா அமைப்பினர் ஒளிந்திருக்கக் கூடிய இடங்களை கண்டுபிடித்து தாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த உலங்கு வானூர்தியே இவ்வாறு சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. (செ)

# விளையாட்டுச் செய்திகள்

## படகோட்டல் போட்டி பிரபல்யப்படுத்த முயற்சி

(கொழும்பு)
இலங்கையின் பழமையான விளையாட்டெனக் கருதப்படும் படகோட்டல் போட்டியை சகல மாவட்டங்களிலும் பிரபல்யமடையச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பொருட்டு மாவட்ட மட்டத்திலும் நாடுபூராவிலும் உள்ள பாடசாலைகள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள் ஆகியவற்றின் பங்களிப்புடன் இந்த விளையாட்டை பிரபல்யமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய படகோட்டல்ச் சம்மேளனம் அறிவித்துள்ளது (உ-10)

## ஆசிய டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதியாட்டம்

(கொழும்பு)
ஆசிய டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதியாட்டம் இன்று லாஹூரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த இறுதிப்போட்டியில் இலங்கை, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. போட்டிகள் இன்றுதொடக்கம் 10ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

இதில் பங்கேற்கும்இலங்கை அணிக்கு சனத் ஜெயசூரியாவும், பாகிஸ்தான் அணிக்கு வக்கார் யூனிஸ்சும் தலைமை தாங்குகின்றனர்.

இவ்விரு அணிகளிலும் அனுபவம் மிக்க பல வீரர்கள் உள்ளதால் போட்டியின் இறுதி முடிவுகள் பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாகியுள்ளது. (உ-10)

## ஆண்கள் பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டசங்கம் ஆண்கள் பெண்களுக்கானகரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியினை நடத்தவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் இம்மாதம் 12ஆம் திகதிக்குமுன்புதி.மனோகரன் 66/10 5 ஆம்ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குதமது விண்ணப்பங்களைஅனுப்பி வைக்க வேண்டும் என்றும் புதிதாக இணைய விரும்பும் கழகங்கள் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் உதைபந்தாட்டலீக் நடத்தும் அமரர் அ. தம்பிராசா ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்திற்கான உதைபந்தாட்டப்போட்டியில் இன்று பி.ப. 3.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியன்ஸ் வி.க. எதிர் மல்லாகம் ஆர்.டி.எஸ்.வி.க.அராலி சில்வெஸ்டார் வி.க. எதிர் தெல்லிப்பளை நாமகள் வி.க. ஆகியன மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் மோதவுள்ளன. (உ-3)

### தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)
கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையம், மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சிப்போட்டியில் இன்று பி.ப. 4.30 மணிக்கு உதயசூரியன் வி.க. எதிர் ஆனந்தா வி.க.ஆகியனமோதவுள்ளன. (உ-3)

### தடகளப் போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)
யாழ்ப்பாணப் பிரதேச செயலர்பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2002 ஆம் ஆண்டிற்கான தடகள விளையாட்டுப் போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி புதன் கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

அன்றுநடைபெற்றபோட்டி முடிவுகளின்படி முதலாமிடத்தைபோர்த்ஸ்ரார்வி.க.வும், இரண்டாமிடத்தை கொழும்புத்துறை ஜெற்லைனர்ஸ் வி. கவும் பெற்றுக் கொண்டன. (உ-223)

# உலக தரிசனம்

## நேபாளத்தில் ஏற்பட்ட சமரில் பத்து மாஓ தீவிரவாதிகள் பலி

(காத்மண்டு)
நேபாளத்தின் மேற்குப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் குறைந்தது 10 மாஓ தீவிரவாதிகளைப் படையினர் கொன்றுள்ளனர்.

மேலும் 6பேரை'உயிருடன் பிடித்து விசாரித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சுசெயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 6பேரும் கைதுசெய்யப்பட்டபோது அவர்களிடமிருந்து துப்பாக்கிகள்வெடிகுண்டுகள், தொலைதொடர்பு சாதனங்களையும் கைப்பற்றியுள்ளனர். (உ-7)

## பயங்கரவாதத்தை ஒழிக்க சகல வழிகளிலும் அமெரிக்கா ஜோர்ஜியாவுக்கு உதவி புரியும்

(வாஷிங்டன்)
ஜோர்ஜியாவில் அல் கெய்டாக்களின் நடமாட்டம்இருப்பதால் அவர்களை அடியோடு அழிக்கும் வரை பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஜோர்ஜியாவுக்கு அமெரிக்கா உதவுமென்று அமெரிக்கா அதிபர் ஜோஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஜோர்ஜிய இராணுவத்திற்கு பயிற்சி அளிப்பதற்காக அமெரிக்கா 50 முதல் 200 வரையிலான இராணுவவீரர்களையும், தொழில்நுட்ப உபகரணங்களையும், ஆலோசனைகளையும் வழங்கவுள்ளது.

இதேவேளை, ஜோர்ஜியாவுக்கு அமெரிக்கப் படைகள் அனுப்பப்படுவதாவது ட்ரான்ஸ் கஸாகஸில் பதற்றத்தை அதிகரிக்கச் செய்யும் என்று ரஷ்யா கூறியுள்ளது. (உ-3)

## அரசின் கோரிக்கையை விஸ்வஹிந்து நிராகரிப்பு

(புதுடில்லி)
அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டும் வேலைகளை ஆரம்பிக்க வேண்டாம் என்ற அரசாங்கத்தின் அண்மைய கோரிக்கையை இந்துக்கள் மீண்டும் நிராகரித்துள்ளனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## குஜராத்தில் தொடர்ந்தும் வன்முறை; 500 பேர் பலி

(பூஜ்)
இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் வன்முறைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் காலை மாநிலத்தின் சில பகுதிகளில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டதையடுத்து அங்கு மீண்டும் இந்து முஸ்லிம் கலவரம் இடம் பெற்றுள்ளது.

இக்கலவரத்தின் போது பதினைந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் பலர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கலவரக்காரர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மேலும் இருவர்கொல்லப்பட்டுள்ளனர்.

மாநிலப்பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையின்படி இதுவரை எழுநூறுபேர் காயமடைந்துள்ளதுடன் வன்முறைகள்தொடர்பாக 2ஆயிரத்து ஐநூறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வறிக்கையில் உயிரிழந்தோர் தொகையை குறைத்துக் காட்டியுள்ளதாகவும் உண்மையில் ஐநூறிற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்றும் செய்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## பேராயர்கள் உண்ணாவிரதம்

(புதுடில்லி)
குஜராத் வன்முறைகளைக் கண்டித்தும் வன்முறைகளில் பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாகவும் இந்திய கத்தோலிக்க பேராயர்கள் உண்ணா நோன்பிருந்து வருகின்றனர்.

ஜலந்தரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய கத்தோலிக்க பேராயர் மாநாட்டிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. (உ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்து மேய்ந் தற்று.

- குறள்

# வலம்புரி

## ஆட்சேர்ப்பு எதற்கு?

நிரந்தர போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் கடற்படைக்கு ஆட்சேர்ப்பதில் அரசு தீவிரம் காட்டுவது சமாதானத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமாதானப்பேச்சு வார்த்தை மூலம் யுத்தம் முடிவுக்கு வரும் போது ஆயிரக்கணக்கான படையினர் வேலையிழப்பதும் அவர்களுக்கு மாற்றுபணி வழங்குவதும் அரசின் நடவடிக்கையாக இருக்கும் எனக கருதப்படுகின்ற போது, கடற்படைக்கு ஆட்சேர்ப்பதுயுத்தத்திற்கான முன்முயற்சி என்றே கருத வேண்டும்.

நிரந்தர யுத்த நிறுத்தம் - புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்போது படைக்கு ஆட்சேர்ப்பதும், ஆயுதங்கள் கொள்வனவு செய்வதும் சமாதான முயற்சிகளை - சூழ்நிலையை நிச்சயம் பாதிக்கவே செய்யும்.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு அதனைக் குழப்பும் நடவடிக்கையிலும் அரசு ஈடுபடுமாயின் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு அப்பால் தமதுஆட்பலத்தை ஆயுதபலத்தை அதிகரிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படும்.

வெளிப்படையாக சமாதானமுயற்சியில் ஈடுபடுவதாகக் கூறிக் கொண்டு உள் முகத்தில் யுத்த ஆயத்தங்களை மேற்கொள்ளுமாயின் சமாதானம் எங்ஙனம் ஏற்படும்?

எனவே நல்லதொரு சமாதான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்போது அரசு பொறுப்பற்ற முறையில் படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளின் சமாதானப் பாதையையும் குழப்பாமல் மனம் திறந்து இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உண்மையான விசுவாசத்தோடு பாடுபட வேண்டும்.

இல்லையேல் சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் மக்கள் அரசு மீது- தேசத்தின் மீது வெறுப்பு கொண்டுவிடுவர். ஒரு நாட்டின் பிரஜை தனது நாட்டின்மீதே வெறுப்புக் கொள்வானாயின் அது அழிவையே தரும்.

# ஓர்இலட்சத்து25ஆயிரம் மாணவர்கள் கல்வியை தொடரமுடியாமல் உள்ளனர்

## த. ஆ. ச. க. ப. அலுவல்கள் செயலாளர்

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களிலும் அகதி முகாம்களிலும் ஓர் இலட்சத்து 25 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் தங்கியுள்ளனர்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கல்வி, பண்பாட்டலுவல்கள் செயலாளர் நா. இராஜநாதன் புதுடில்லியில் நடைபெற்ற சார்க் பிராந்திய ஆசிரிய தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கு நடத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் பங்கு பற்றி அறிக்கை சமர்ப்பித்து பேசும்போது தெரிவித்துள்ளார்.

இலங்கையில் யுத்த அனர்த்தங்கள் காரணமாகத் தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்ததனால்தமது கல்வியை தொடரமுடியாத நிலையில் இம்மாணவர்கள் உள்ளனர்.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ்மாணவர்கள் தரமான கல்வியை பெறுகிறார்கள் என்று எவ்வாறு கூறுவது என்று கேள்வியெழுப்பிய அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

1990 ஆம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் மாணவரின் எண்ணிக்கை 2 லட்சத்து 19 ஆயிரமாக இருந்தது. இந்த எண்ணிக்கை 1995 ஆம் ஆண்டில் 84 ஆயிரமாக வீழ்ச்சியடைந்தது என்றும் குறிப்பிட்ட அவர்,

தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை படைக்குத் திரட்டி வருகின்றனர் என அரசு பொய்ப்பிரசாரம் செய்து வருகின்றது.

ஆனால் இதில் எவ்வித உண்மையுமில்லை என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலில் வழமை போல் இவ்வருடமும் மகா சிவராத்திரி விரதம் சிறப்பாக நடைபெறவும் அம்பாள் சமுத்திரத்தீர்த்தம் ஆடவும விரதம்அனுட்டிக்கும் அடியார்கள் தங்கியிருக்கவும் ஏற்றஒழுங்குகளை அறங்காவலர் சபையினர் செய்துள்ளனர். (உ)

## இலவச பாட நெறிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திருச்சபையின் கல்வி முன்னேற்ற பாடத்திட்டத்தில் யாழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டுமாணவர்களுக்கான விசேட ஆங்கிலம், நடனம், வயலின், வீணை, சங்கீதம், மிருதங்கம், பியானோ ஆகிய பாடநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பாடநெறிக்கும் 30 மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இக் கற்கைநெறி சுண்டிக்குளியில் உள்ள தில்லையம்பலம் நினைவு கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பிக்கவிரும்புபவர்கள் இம் மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர்விண்ணப்பிக்க வேண்டும் என்றும் விண்ணப்ப படிவங்களை சுண்டிக்குளியில்உள்ளபரியோவான்ஆலய காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஆசியஅபிவிருத்தி வங்கியின் தலைவர் வவுனியா விஜயம்

(வவுனியா)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் இன்று வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இவருடன் இலங்கையில் உள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரும்வருகை தரவுள்ளார்.

இன்று வவுனியா செல்லும் இவர்கள் வவுனியா செயலகத்தில் நடைபெற உள்ள மகாநாடு ஒன்றில் கலந்து கொள்ளார்கள்.

ஆசிய அபிவிருத்தி வங்கி வவுனியா மாவட்டத்தில் 00 மில்லியன் ரூபாவை பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்குச் செலவுசெய்யவுள்ளது.

சுகாதாரம், கல்வி, வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆகியவற்றுக்கு இப்பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவரும் இந்த உயர் அதிகாரிகள், வவுனியா வைத்தியசாலை, நலன்புரிநிலையங்கள் முக்கியமான பாடசாலைகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்கள்.

இவர்களுடன் வடகிழக்கு மாகாண சமூகஅபிவிருத்தி நிதியத்தின் திட்டப்பணிப்பாளர் எஸ். இலங்காநேசனும் செல்வார். (வ)

## தென்னையில்ஏறியவர் வீழ்ந்து படுகாயம்

தேங்காய் பிடுங்க தென்னையில் ஏறியவர் தவறி விழுந்து படுகாயமுற்றார்.

கொடிகாமம் எருவளைப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அந்த இடத்தைச் சேர்ந்த சி. கமலநாதன் (வயது 42) என்பவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ- 23)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(செம்பியன்பற்று)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட மந்திகை, புலோலி, மாதனை, கிராமக்கோடு ஆகிய பகுதிகளில் இன்று தெருநாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதால், வளர்ப்பு நாய்களைக் கட்டிவளர்க்குமாறு பருத்தித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (உ-42)

## இந்தியா இப்படியும் சாதனை படைத்துள்ளது

(புதுடில்லி)

உலகிலேயே அதிகளவான தொழுநோயாளர்கள் இந்தியாவில் தான் இருக்கிறார்கள என்ற திடுக்கிடும் தகவல் அண்மையில் வெளியாகியுள்ளது.

உலகம் முழுவதும் சுமார் 6 லட்சம் தொழுநோயாளர்கள் வாழ்கிறார்கள்

இதில் இந்தியாவில் மட்டும் 4 லட்சத்து 20 ஆயிரம் பேர் வாழ்கின்றார்கள். (செ)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(புத்தூர்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1-30 மணியளவில் அதிபர் அ. அருந்தவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-235-4)

## மண்ணெய் குடித்த குழந்தை ஆஸ்பத்திரியில்

சோடாப் போத்தலில் இருந்த மண்ணெண்ணெயை தவறுதலாக அருந்தியதால் பாதிப்படைந்த குழந்தை மேலதிக சிகிச்சையின் பொருட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இ. ராஜ்குமார் என்ற ஒரு வயதுக் குழந்தையே இவ்வாறு சிகிச்சை பெற்று வருகின்றது. (உ-23)

## தினசரி தியானம்

### தோல்வி

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்.

- திருக்குறள்

இமயமலையில் பத்திரிகாச்சிரமம் போகின்றவர்கள் மேட்டில் ஏறுவது போன்று, பள்ளத்திலும் இறங்கியாக வேண்டும். அருட்தேவே, உன்னை நாடிவரும் எனக்குத் தோல்விகள் பல உண்டாவது இயல்பு.

தோல்வியைக் குறித்து மனமே, நீதுயரடையாதே தோல்வியினின்று நீ கற்றுக் கொள்ள வேண்டியதனிப் பாடம் ஒன்றுண்டு. தோல்வியினின்று நீ பெறுகிற ஞானத்தையும், நல்லறிவையும் வேறுயாருமே உனக்கு வழங்கமுடியாது. தோல்வியைத் துருவியாராய்ந்தால், உன்னுடைய வீழ்ச்சியை நீ விசாரித்துப் பார்த்தால், மெய்யறிவு என்னும் பொக்கிஷத்தை அதனுள் நீகாண்பாய். இப்பொழுது தோல்வியாகத் தென்படுவது நாளை வரும் வெற்றிக்கு வித்தாகும்.

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்



## தவக்கால கிறிஸ்தவ சிந்தனைகள் (22)

### தவக்காலம் - மூன்றாம் வாரம் (ஊதா)

### திபா 147:12-13,15-16, 19-20.

### 'எருசலேமே ஆண்டவரைப் போற்றுவாயாக'

'வானத்தைப் பார்த்தேன் பூமியைப் பார்த்தேன் மனுசனை இன்னும் பார்க்கலியே' என்கிறான் கவிஞன். மனிதனுக்கு முகவரிதந்து அவனைஅடையாளம் காட்டுவது அவன் கைக்கொள்ளும் நெறிமுறைகளே! இன்றைய மனிதனோ நெறிமுறைகளைத் தன்சுதந்திரச்சிறகைக் கட்டுப்படுத்தும் சுமைக்கற்கள் என வெறுக்கின்றான். மனம் போன போக்கிலே வாழ முற்படுகிறான். திருச்சட்டத்தைநிறைவேற்ற வந்தஇயேசு சட்டங்கள் மனிதனை விடுவிக்க வேண்டும் அடிமைப்படுத்த அல்ல (மாற் 2:27-28) என்று எடுத்துரைத்தார்.

ஆனால் எல்லாம் கடந்த அவர் தன்னை மனித வாழ்வுச் சட்டங்களுக்கு உட்படுத்திக் கொண்டு புதுப் பொருள் தருகிறார். நாமோ இயேசு எனும் நெறி முறையே நம்வாழ்வின் வழிமுறையாகக் கொள்வோம்.

- காவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்கிற்கு
ஜீவாகாரம்
வளரும் பிள்ளைகளுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்ற சத்துணவு
உணவிற்கு தயார் நிலையில் உள்ள ஒரு முழு உணவு
அன்னா தொழிற்சாலை
இணுவில்
T.P.: 3565

# வடக்குக் கிழக்கில்
# உள்ளூராட்சித் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் திட்டமிட்டபடி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவது உறுதியாகி விட்டதாக தேர்தல் ஆணையாளர் திணைக்களம் தெரிவித்திருப்பதாக நம்பகமாக தெரியவந்துள்ளது.

வடக்குக் கிழக்கில் தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடத்துவது உகந்ததல்ல என்று தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் அறிக்கை தந்திருந்த போதும் அத் தேர்தலை ஒத்திவைத்தால் அதற்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்யுமிடத்து தற்போதைய யுத்தநிறுத்தச் சூழலில் தேர்தலை நடத்துவது கடினம் எனக் கூற முடியாதென்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வடக்குக் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை தேர்தல்த் திணைக்களம் ஒத்திவைக்க முடியாதென்று தெரிவித்துள்ளதுடன் யாழ்ப்பாணத்துக்கான வாக்குச் சீட்டுக்கள் அடிக்கப்பட்டு விட்டதாகவும் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் தபால் மூல வாக்களிப்பிற்கு கால ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தேர்தல்த்திணைக்களம் மேலும் அறிவித்துள்ளது.

இதேவேளை கொழும்பு மாநகர சபை உட்பட 20சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (வ)

இலங்கையில் முதன் முதலாக நீல சோப்பை அறிமுகப்படுத்தியவர்கள் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தாரே!
மில்க்வைற் சோப் இன்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 3541

## அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கு இன்று நடைபெறவிருந்த மாதாந்த கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (இ-23-4)

## வவுனியாவில் அலுவலகம்

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாட்டு வவுனியா நகரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுக் காரியாலயம் ஒன்று பொருத்தமான இடத்தில் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## 12 இந்திய மீனவர்களுக்கு 13 வரை விளக்கமறியல்

(யாழ்பாணம்)

வடமராட்சி நாகர்கோவில் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த 12 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 13ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

இம் மீனவர்கள் கடந்த மாதம் 19ம் திகதி கடற்படையினரால் நாகர் கோவில் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, கடந்த சனிக்கிழமை இரவு நயினாதீவு கடற்பரப்பில் வைத்து 7 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்து ஊர்காவற்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இம் மீனவர்களை யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்ன ராஜா முன்னிலையில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 18ம் திகதி வரை பிரஸ்தாப மீனவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார் (இ-10)

## புரிந்துணர்வு...

அவ் உடன்பாட்டில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக இவ் உடன் படிக்கை உருவாக்கப்பட்டுள்ளது

யுத்தநிறுத்த உடன் படிக்கை நாட்டில் அமுல்படுத்த பட்டாலும் நாட்டின் பாதுகாப்பில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. இந்த உடன் படிக்கையில் எதிர்கட்சிகளின் கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் அரசாங்கம் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டவுள்ளது.

தமது தடையை நீக்குமாறு விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் எதனையும் இதுவரை விடுக்கவில்லை. இது விடுதலைப்புலிகள் சமாதா னத்தில் கொண்டிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளது. தடை விடயத்தில் புலிகள் மேற் கொண்ட நடவடிக்கையால் கடந்த காலத்தில் பேச்சு வார்த்தைகள் முறிவடைந்திருந்தன.

ஆனால் தற்போது அடுத்து வரும் 3மாதகாலத்திற்குள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான சூழ்நிலைகள் தோன்றியுள்ளது. அதற்கான முயற்சியில் இருசாராரும் ஈடுபட்டுள்ளனர் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (இ-4)





சென்பற்றிக்ஸ் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடை பெற்றபோது எடுக்கப்பட்டபடம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் சித்திரா ரஞ்சன், பதில் அதிபர் அருட்திரு றெறோஸ் செல்வநாயகம் அடிகளார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ் கல்லூரி அதிபர் அருட்திரு யேசுதாஸன் அடிகளார் ஆகியோரை முதற் படத்திலும்.

பரிசுவழங்கும் நிகழ்வை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பி, சிஹல உறுமய வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராக ஜே.வி.பி, சிஹல உறுமய ஆகிய கட்சிகள் கொழும்பு நீதிமன்றில் மனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளன. தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்களை மேல் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது ஜே.வி.பியின் மனுமீதான விசாரணை எதிர்வரும் 15ந் திகதி வெள்ளிக்கிழமையும், சிஹல உறுமய தாக்கல் செய்த மனு மீதான விசாரணை எதிர்வரும் 14ந் திகதி வியாழக்கிழமையும் நடைபெறும். (ம)

## தமிழீழ...

நோக்குடன் சிலர் செயற்படுவார்களானால் நாட்டில் பாரிய யுத்தம் ஒன்று ஏற்பட்டு பேரழிவைச் சந்திக்கும்

இந்நிலையில் தமிழீழத்தையும் தமிழ்மக்களின் உரிமையையும் பெறுவதற்காக நான் விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராட வேண்டிவரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்

சமாதானப் பேச்சுவார்த்தை யின் போது வடக்கு கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாது விட்டால் நாடு இரண்டாகப் பிரிவதை எவராலும் தடுக்க முடியாது. இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்கும் முடிவுகளை எவராலும் தடுத்து நிறுத்தவும் முடியா தென்று அவர் மேலும் தெரிவித்தார் (இ-4)

## டிரோன்...

விளக்கியுள்ளார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் சமாதான நடவடிக்கைகளை ஆதரிப்பதாக முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இந்தியாவில் வைத்து கூறியது குறித்தும் பிரதமர் ரணிலின் செயற்பாட்டை அவர் விமர்சித்தது குறித்தும் இச்சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது (இ)

## விமான...

யாழ்.சிங்கள மகாவித்தியாலயத்திற்கு வருமாறும் இன்று பயணம் செய்ய பயணச்சீட்டு பெற்றவர்களை நாளை காலை பயண ஏற்பாடுகளுடன் வருமாறும் யாழ். விமான சேவை பிரிவு அறிவித்துள்ளது.(இ)

## யாழ்-கண்டி...

கோரியுள்ள 3அரைக் கோடி ரூபாவை வழங்கி பாதை திறப்பதற்கு வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

பாதைதிறப்பதற்கான பணத்தையும் இராணுவச் சோதனைச் சாவடிகள் மற்றும் கட்டடங்கள் அமைப்பதற்கான பணத்தையும் புனர்வாழ்வு அமைச்சில் கடனாகப் பெற்றக்கொள்ளுமாறும், கண்டி-யாழ்ப்பாணம் வீதி திறப்பது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு அவருடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறும் பிரதமர் பணித்துள்ளார்.

யாழ்-கண்டி வீதி திறப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவும் முப்படைத் தளபதிகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாளுக்குச் சென்று இராணுவத்தினருடன் கலந்துரையாடியமை தெரிந்ததே.

இதே வேளை, கடந்த மாதம் 15 ம் திகதி வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான கண்டிவீதி பயணிகள் போக்குவரத்திற்கு திறந்து விடப்பட்ட சமயம் யாழ்ப்பாணத்திற்கான பாதைத் திறப்பில் இழுபறிநிலை காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (வ)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையினரால் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற ஆசிரியர் கலாசாலை அணியினரைப் படத்தில் காணலாம்.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா ச.ச. நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு
பின்வரும் போட்டிகள் எம்மால் நடாத்தப்பட உள்ளது.
★ மென்பந்து கிரிக்கற் - 9 பேர் கொண்ட 12 ஓவர்
★ கரப்பந்து - 6 பேர் கொண்ட ஓவர் கேம்
★ மரதன் ஓட்டம் (ஆண்) - 10 மைல்
விண்ணப்ப முடிவு திகதி: 2002 - 03 - 14
விண்ணப்பங்கள் கிடைக்குமிடம்: ஸ்ரீ காந்தா புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
– செயலாளர் –
(4782)

சுவைப் பிரியர்களே! இதோ புதியதோர் அறிமுகம்!!
ஜீவா மிக்சர் Jeeva Mixture
மிக்சர், பகோடா, பொரித்த கடலை, கச்சான், மரவள்ளிப் பொரியல், பூந்தி மற்றும் பற்பல....
★ உண்ண உண்ண மேலும் மேலும் உண்ணத் தூண்டுவது
★ கறு முறு சிற்றுண்டிகள்
★ சுகாதாரமுறைப்படி சுத்தமாகத் தயாரிக்கப்பட்டது
★ உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் இரசாயனக் கலப்பற்றது
திருமண வைபவங்கள் ஏனைய மங்களகரமான வைபவங்களுக்கு விசேடமாக செய்து கொடுக்கப்படும். (ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்)
PARA MASTER கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அருகாமை)

INSTITUTE OF ENGLISH EDUCATION
& COMPUTER DIVISION
(PERSONAL & GROUP CLASSES)
121/1, அரசடி வீதி,
கந்தர்மடம்.
Grade 3 - O/L & A/L
By:
Mr. K. Ramanathasan
[C3594]

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கந்தையா

நவாலி கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தையா அவர்கள் திங்கட்கிழமை (4.3.2002) அன்று அமரத்துவம் அடைந்து விட்டார், அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை (7.3.2002) பி.ப. 1.00 மணிக்கு நவாலியிலுள்ள கந்தக் கோட்டத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
[4788]

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org